ந.க.எண்.ப6/612/2025
நாள்: 10.04.2025

மாவட்ட ஆட்சியரகம்(சஉதி)
திருச்சிராப்பள்ளி.

## இணையதளச்செய்தி

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பள்ளிகளில் செயல்படும் சத்துணவு மையங்களில் காலியாக உள்ள 231 சமையல் உதவியாளர் பணியிடங்கள் நேரடியாக நியமனம் செய்யப்படவுள்ளன. ஊராட்சி ஒன்றிய அலுவலகம்/மாநகராட்சி கோட்ட அலுவலகங்களில் நேரடி நியமனம் செய்யப்படவுள்ள சமையல் உதவியாளர் பணியிடங்களின் எண்ணிக்கை இனசுழற்சி வாரியாக தெரிந்து கொள்ளலாம்.

சத்துணவு மையங்களில் சமையல் உதவியாளர்களாக தொகுப்பூதியத்தில் பணிநியமனம் செய்யப்படுவோருக்கு, ஓராண்டு கால பணிக்குப்பின்பு சிறப்பு காலமுறை ஊதியத்தில் (ஊதிய நிலை 1(Level of Pay-ரூ3000-9000)) ஊதியம் வழங்கப்படும். இப்பணிக்கு பொதுப்பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் 21 வயது முதல் 40 வயது வரை, பழங்குடியினர் 18 வயது முதல் 40 வயது வரை, விதவைகள் மற்றும் கணவரால் கைவிடப்பட்டவர் 20 வயது முதல் 40 வயது வரையுடைய பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம். வயது நிர்ணயம் அறிவிப்பு தேதியினை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படும். குறைந்த பட்ச கல்வி தகுதி பத்தாம் வகுப்பு தேர்ச்சி/தோல்வி பெற்றிருக்க வேண்டும். தமிழில் சரளமாக எழுதப் படிக்கத் தெரிந்தவராக இருக்க வேண்டும். நியமனம் கோரும் மையத்திற்கும் விண்ணப்பதாரரின் குடியிருப்பிற்கும் இடைப்பட்ட தூரம் 3 கி.மீ-க்குள் இருக்க வேண்டும் (ஊராட்சி-குக்கிராமம்-வருவாய் கிராமம் போன்றவைகள் கணக்கில் எடுத்துக்கொள்ள தேவையில்லை).

காலிப்பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கும்போது உரிய விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து தொடர்புடைய ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் / மாநகராட்சி கோட்ட அலுவலகத்தில் 16.04.2025 முதல் 30.04.2025 வரை அனைத்து வேலை நாட்களிலும் விண்ணப்பிக்க இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. விண்ணப்பத்துடன் பள்ளி மாற்றுச் சான்றிதழ், SSLC மதிப்பெண் சான்றிதழ், குடும்ப அட்டை, இருப்பிட சான்று, ஆதார் அட்டை, சாதிச்சான்று போன்றவற்றின் நகல் இணைக்கப்பட வேண்டும். விதவை, கணவரால் கைவிடப்பட்டோர், மாற்றுத் திறனாளிகள் அதற்கான சான்றிதழ்களின் நகல்களையும் இணைக்க வேண்டும். நேர்முகத் தேர்வின்போது அசல் சான்றிதழ்களுடன் கலந்து கொள்ள வேண்டும். விண்ணப்ப படிவத்தினை அந்தந்த ஊராட்சி ஒன்றிய அலுவலகம்/மாநகராட்சி கோட்ட அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
திருச்சிராப்பள்ளி.

இராசு
10/04/2025

## விண்ணப்ப படிவம்

**சமையல் உதவியாளர் பணியிடங்களுக்கான விண்ணப்பம்**

| சமீபத்தில் எடுக்கப்பட்ட புகைப்படத்தினை ஒட்டவும் |
|---|

| மாவட்டம் | ஊராட்சி ஒன்றியம்/மாநகராட்சி | விண்ணப்பிக்கும் பள்ளி |
|---|---|---|
| திருச்சிராப்பள்ளி | | |

| | |
|---|---|
| விண்ணப்பதாரரின் பெயர் | |
| தந்தை /கணவர் பெயர் | |
| கைபேசி எண் | |
| விண்ணப்பதாரரின் இருப்பிட முகவரி (குடும்ப அட்டையில் உள்ளபடி) மற்றும் வட்டாட்சியர் அவர்களிடமிருந்து பெறப்பட்டது | |
| ஊராட்சி ஒன்றியம் /மாநகராட்சியின் பெயர் | |
| கல்வித் தகுதி (சான்று இணைக்கப்பட வேண்டும்) குறைந்த பட்சம் 10-ம் வகுப்பு தேர்ச்சி/தோல்வி பெற்றிருக்க வேண்டும். தமிழில் கட்டாயம் எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டும் | |
| பிறந்த தேதி /வயது | |
| சாதி மற்றும் உட்பிரிவு (வட்டாட்சியர் சான்று இணைக்கப்பட வேண்டும்) | |
| மாற்றுத்திறனாளி(ஆம் எனில் மாற்றுத் திறனாளி அடையாள அட்டை இணைக்கப்பட வேண்டும்) | ஆம்/இல்லை |
| ஆதரவற்ற விதவை /ஆதரவற்ற பெண்/கணவரால் கைவிடப்பட்டவரா? ஆம் எனில் (வட்டாட்சியரின் சான்று இணைக்கப்பட வேண்டும்) | ஆம்/இல்லை |
| பணியிடம் கோரும் மையம்/பள்ளியின் பெயர் | |

| | |
|---|---|
| விண்ணப்பதாரரின் இருப்பிடத்திற்கும் பணியிடம் கோரும் மையத்திற்கும் இடைப்பட்ட தூரம்(மூன்று கிலோ மீட்டருக்குள் இருத்தல் வேண்டும்) | |

நாள்:

இடம்: விண்ணப்பதாரர் கையொப்பம்

**இணைப்பு:**

1. பள்ளி மாற்றுச் சான்றிதழ் நகல்.
2. 10-ம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் நகல்.
3. குடும்ப அட்டை நகல்.
4. ஆதார் அட்டை நகல்.
5. சாதிச் சான்றிதழ் நகல்.